(பதிப்புரிமையுடையது)

உ
சிவமயம்

விவேகானந்த சபை கொழும்பு
அகில இலங்கை
7 சைவசமய பாடப்பரீட்சை : 2025
தரம் ஏழு



www.nselva.com

காலம் அளவு	1.30 மணி

புள்ளிகள் : 100

இல.	
மாணவர் சுட்டெண்:	

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. பகுதி ஒன்றிற்கு இத்தாளிலேயே விடை எழுதுக.

பகுதி - I

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. விஜயதசமி அன்று இடம்பெறும் நிகழ்வு.
   1) ஏடு தொடக்கல் 2) புதுமனை புகுதல் 3) சூரன்போர் 4) மகாளயம்
2. ''உப்பிட்டவரை உள்ளளவும் நினை" எனும் பழமொழி வலியுறுத்துவது.
   1) பணிவு 2) வாய்மை 3) நன்றி மறவாமை 4) அன்புடைமை
3. மனுநீதிச்சோழனின் மகன்.
   1) மிருகண்டு 2) வீதிவிடங்கன் 3) பிரகலாதன் 4) வாகீசர்
4. "இனி நாம் ஐவர் ஆனோம்" என்று கூறியவர்?
   1) குகன் 2) பரதன் 3) இலக்குவன் 4) இராமன்
5. மங்கள வாரம் எனப்படும் கிழமை.
   1) செவ்வாய் 2) புதன் 3) வியாழன் 4) வெள்ளி
6. மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்தில் தேர்த்திருவிழா நடைபெறும் நாள்.
   1) தைப்பூசம் 2) பங்குனி உத்தரம் 3) ஆடிப்பூரம் 4) மாசிமகம்
7. நாற்பது பிரபந்தங்களையுடைய திருமுறை.
   1) எட்டாந்திருமுறை 2) ஒன்பதாம் திருமுறை 3) பத்தாம் திருமுறை
   4) பதினோராம் திருமுறை
8. "விருது குன்றமா...." என்னும் தேவாரம் அடங்கும் பதிகம்.
   1) திருக்கோணேச்சரப்பதிகம் 2) திருக்கேதீச்சரப்பதிகம்
   3) திருநீற்றுப்பதிகம் 4) திருவாலங்காட்டுப்பதிகம்
9. கோயில் எனச் சிறப்பிக்கப்படும் தலம்.
   1) சிதம்பரம் 2) திருக்கடம்பூர் 3) திருமழபாடி 4) திருவாலவாய்
10. திருத்தொண்டர் புராணம் எனப்போற்றப்படும் நூல்.
    1) கந்தபுராணம் 2) திருவிளையாடற் புராணம் 3) பெரியபுராணம் 4) திருமந்திரம்
11. கவுணியர்கோன் என்னும் நாமத்தால் போற்றப்பட்டவர்.
    1) திருஞானசம்பந்தர் 2) திருநாவுக்கரசர் 3) சுந்தரர் 4) மாணிக்கவாசகர்
12. சேர். பொன். இராமநாதனால் கற்றளியாகக் கட்டப்பெற்ற கோயில்.
    1) திருக்கேதீச்சரம் 2) மாவிட்டபுரம் 3) பொன்னம்பலவாணேச்சரம் 4) நல்லூர்
13. அறிவித்தால் மட்டும் அறியும் பொருள்.
    1) பதி 2) பசு 3) பாசம் 4) ஆணவம்

14. இலங்கையைச் சிவபூமி என்று அழைத்தவர்.
1) சேந்தனார் 2) திருமூலர் 3) நாவலர் 4) சுந்தரர்
15. மாருதப்புரவீகவல்லி நோய் நீங்க நீராடிய தீர்த்தம்.
1) பாலாவி 2) தெதுறுஓயா 3) கீரிமலை 4) சித்தாமிர்தபுட்கரணி
16. பொறுமைக்கு உதாரணமாகத் திகழ்ந்தவன்.
1) தர்மன் 2) வீமன் 3) அர்ச்சுனன் 4) நகுலன்
17. தெல்லிப்பளை துர்க்கை அம்மன் தலவிருட்சம்.
1) வன்னி 2) அரசு 3) வில்வம் 4) இலுப்பை
18. மனிதனுடைய நற்குணங்களுள் நனி சிறந்து விளங்குவது.
1) நன்றி 2) பணிவு 3) நீதி 4) பொறுமை
19. திருநாவுக்கரசர் சமணசமயத்துக்கு மாறியபோது பெற்ற பெயர்.
1) மருணீக்கீயார் 2) வாகீசர் 3) ஆளுடைய அரசு 4) தருமசேனர்
20. கடம்ப மாலையை அணிந்த கடவுள்.
1) விநாயகர் 2) ஐயனார் 3) முருகன் 4) அம்பிகை
21. அனுராதபுரத்தில் "சிவிகசாலை" என்னும் நிலையத்தை அமைத்த மன்னன்.
1) பண்டுகாபயன் 2) துட்டகைமுனு 3) எல்லாளன் 4) மகாசிவன்
22. திருநாவுக்கரசர் முத்தியடைந்த தினம்?
1) வைகாசிமூலம் 2) சித்திரைச்சதயம் 3) ஆனிமகம் 4) ஆவணிமூலம்
23. திருத்தோணிபுரம் எனப் போற்றப்படும் தலம்?
1) திருமழபாடி 2) திருக்கடம்பூர் 3) திருச்செந்தூர் 4) சீர்காழி
24. பஞ்சபுராண வரிசையில் நான்காவதாக ஓதப்படுவது.
1) திருவாசகம் 2) திருவிசைப்பா 3) திருப்பல்லாண்டு 4) பெரியபுராணம்
25. மாணிக்கவாசகர் நின்ற நெறி.
1) சரியை 2) கிரியை 3) யோகம் 4) ஞானம்

(25 புள்ளிகள்)

2. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. புதுமனை புகுதலை வேறு எவ்வாறு அழைப்பர்?
.....
2. மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் தேர்த்திருவிழா நடைபெறும் நன்னாள் யாது?
.....
3. சன்மார்க்க நெறியில் நிற்போர் அடையும் முக்தி யாது? .....
4. "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்று பாடியவர் யார்?
.....
5. சுந்தரர் பதிகங்கள் எத்தனையாம் திருமுறையில் அடங்கும்? .....
6. திருமுருகாற்றுப்படை எனும் நூலை அருளியவர் யார்? .....
7. ஆலயம் என்பதன் பொருள் யாது? .....
8. குறிஞ்சிக்குமரன் ஆலயம் அமைந்துள்ள பல்கலைக்கழகம் யாது?
.....
9. 'அன்பே சிவம்' என்று கூறும் நூல் யாது? .....
10. திருமுறைகளைத் தொகுத்தவர் யார்? .....
11. சைவசமயிகள் நியமமாகச் செபிக்கவேண்டிய சிவமூல மந்திரம் யாது?
.....
12. செபஞ் செய்யும் பொழுது மனம் எங்கே அழுந்திக் கிடத்தல் வேண்டும்?
.....
13. தேவாரம் செய்தருளியவர் யாவர்? .....

14. சமயகுரவர் அற்புதங்களினாலே யாது விளங்குகின்றது?

.....

15. தமிழ்வேதத்தை அன்புடனே நியமமாக ஓதினவர் யாது பெறுவர்?

.....

(15 x 1 = 15 புள்ளிகள்**)**

பகுதி - II

1. பின்வரும் தொடக்கத்தையுடைய திருப்பாடல்களுள் எவையேனும் இரண்டினைப் பிழையின்றி எழுதுக.

1. ''நங்கடம்பனைப் .....''
2. ''நத்தார் படை .....''
3. ''வேதநெறி .....''
4. ''இறவாமல் .....''

(2 x5 = 10 புள்ளிகள்**)**

2. பின்வரும் தொடக்கத்தையுடைய குறட்பாக்களை எழுதுக.

1. ''ஒழுக்கத்து நீத்தார் .....''
2. ''செயற்கரிய செய்வார் .....''
3. ''ஒல்லும் வகையான் .....''
4. ''மனத்துக்கண் .....''
5. ''நிறைமொழி மாந்தர் .....''

(5 x1 = 5 புள்ளிகள்**)**

பகுதி - III

1. எவையேனும் 5 வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. ''இறையுணர்வை வளர்க்கப் பண்டிகைகள் உதவுகின்றன''
   (அ) 'மகரசங்கிராந்தி' என்றால் என்ன?
   (ஆ) போகிப்பண்டிகை அன்று யாது செய்வர்?
   (இ) மாட்டுப்பொங்கல் பண்டிகையை எவ்வாறு கொண்டாடுவர்? **(9** புள்ளிகள்**)**

2. ''சைவ சமயத்தவரின் பெருஞ்சொத்து திருமுறைகளாகும்''
   (அ) அடங்கன்முறை என்றால் என்ன?
   (ஆ) திருமுறைப்பாடல்களின் சிறப்புக்கள் மூன்று எழுதுக?
   (இ) 'திருச்சிற்றம்பலம்' கூறுவதன் காரணம் யாது?

   (9 புள்ளிகள்**)**

3. ''சைவசித்தாந்தம் முப்பொருள்கள் பற்றிக் கூறுகின்றது''
   (அ) முப்பொருள்கள் எனப்படுபவை யாவை?
   (ஆ) சொரூப லக்கணம் என்றால் என்ன?
   (இ) ஐந்தொழில்கள் எவ்வகை ஐவகைத் திருமேனிகள் ஊடாக ஆற்றப்படுகின்றன?

   (9 புள்ளிகள்**)**

4. ''பூழியர் கோன் வெப்பொழித்த
   புகலியர் கோன் கழல் போற்றி''
   (அ) திருஞானசம்பந்தர் நிகழ்த்திய அற்புதங்கள் மூன்று தருக.
   (ஆ) சுந்தரர் நிகழ்த்திய சமயப் பணிகளில் எவையேனும் மூன்றை எழுதுக.
   (இ) மாணிக்கவாசகரைக் குறிக்கும் மறுபெயர்கள் மூன்று தருக.

   (9 புள்ளிகள்**)**

5. ''தமிழர்கள் நாட்டார் தெய்வ வழிபாட்டில் மிகவும் நம்பிக்கை கொண்டவர்கள்''

(அ) நாட்டார் வழிபாட்டினைக் குறிக்கும் மறுபெயர்கள் மூன்று தருக?

(ஆ) யாழ்ப்பாண மாவட்டத்தில் முனியப்பர் வழிபாடு பெறும் முக்கியத்துவத்தை எழுதுக.

(இ) நாட்டார் வழிபாட்டால் ஏற்படும் பயன்கள் மூன்று எழுதுக.

(9 புள்ளிகள்**)**

6. ''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்''

(அ) ஆலயத்துக்கு எவ்வாறு செல்லுதல் வேண்டும்?

(ஆ) ஆலயத்தில் வழிபடும் முறையைப்பற்றி எழுதுக?

(இ) ஆலயவழிபாட்டால் அடையும் நன்மைகள் மூன்றினை எழுதுக.

(9 புள்ளிகள்**)**

7. ''இறவாத இன்ப அன்பு வேண்டும்''

(அ) புனிதவதியாருடன் தொடர்புடைய மாம்பழக் கதையை எழுதுக.

(ஆ) புனிதவதியார் இறைவனால் 'அம்மையே' என அழைக்கப்பட்டதற்கான சந்தர்ப்பத்தை எழுதுக.

(இ) காரைக்கால் அம்மையார் இயற்றிய பிரபந்தங்கள் மூன்று எழுதுக.

(9 புள்ளிகள்**)**

(5 x 9 = 45 புள்ளிகள்**)**